மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2025
மாதிரிப் பரீட்சை - 01

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

பத்திரம் - I

1 மணித்தியாலம்

5

சுட்டெண் .....

பாடசாலை .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	-
08	-
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
☐ × $2\frac{1}{2}$ = ☐ புள்ளிகள்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்.	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.ikedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

அழையுங்கள் :

76667-4945



zoom

எப்பாத்திலிருந்தும்
இணையலாம்



தரம் 1
தொடக்கம்

தரம் 5
வரை


- பாடத் தெரிவுகள் செய்ய முடியாது.
- சகல பாடங்களுக்குமான மாதக்கட்டணம்
- அனைத்து பாடங்களுக்குமான recording வழங்கப்படும்.


நுண்ணறிவு
வினாத்தாள்
(பகுதி 1, பகுதி 2)


Spoken English

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்


01. பின்வரும் மூன்று உருக்களிலும் ஒன்று வேறுபட்டுள்ளது. அவ்வுருவைத் தெரிவு செய்க.


1)


2)



3)

02. தரப்பட்ட உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களையும் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடை எது?


A B C D E F

1) A உம் E உம் 2) C உம் D உம் 3) B உம் F உம்

03. கீழே தரப்பட்டுள்ள பொருள்கள் மூன்று கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக் கூட்டங்களை சரியாகக் காட்டும் விடை யாது?


A B C D E F

1) AE CD BD 2) AE BC DF 3) AF DE BC

04. பின்வரும் கோலத்தின்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

ACE , BDF , CEG , DFH , ...

1) EGI 2) JGI 3) EHI

05. நகரம் ஒன்றில் அதிகமாக இருக்கக்கூடியவை.


1) கடைகள் 2) கட்டடங்கள் 3) பாதைகள்

06. பின்வரும் கோவையை அவதானித்து ✶, ◆ என்ற குறியீடுகள் குறித்து நிற்பவை.

4 ✶ 3 = 8 ◆ 4

1) கூட்டல், கழித்தல் 2) கழித்தல், வகுத்தல் 3) பெருக்கல், கூட்டல்

07. வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண் யாது?



1) 25 2) 40 3) 38

08. 24 பென்சில்களிலிருந்து ¾ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 18 3) 12

www.ikedu.lk


09. சதுர வடிவக் காணியைச் சுற்றி 16 தூண்கள் நடப்பட்டிருந்தன. எனின் ஒரு பக்கம் எத்தனை தூண்கள் காணப்படும்?

1) 6 தூண்கள் 2) 5 தூண்கள் 3) 4 தூண்கள்

10. 

இந்தத் தாயக்கட்டையில் தற்போது எமக்குப் புலப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை 9 ஆகும். அதன்படி இந்தத் தாயக்கட்டையில் தற்போது எமக்குப் புலப்படாத புள்ளிகளின் எண்ணிக்கை

1) 12 2) 10 3) 14


11. 

உருவில் காணக் கிடைக்கும் செங்கோணங்களின் மொத்த எண்ணிக்கை

1) 8 2) 4 3) 6

12. உட்பக்கம் தெரியாத பெட்டியொன்றினுள் 5 சிவப்பு நிறப் பந்துகளும் 4 வெள்ளை நிறப் பந்துகளும் உள்ளன. பெட்டியின் உள்ளே பார்க்காது ஒரு வெள்ளை நிறப் பந்தை எடுக்க வேண்டுமாயின், பெட்டியிலிருந்து எத்தனை பந்துகள் எடுக்க வேண்டும்?

1) 5 2) 4 3) 6

13. 




இதன்படி அப்பிள்பழம் ஒன்றின் விலை யாது?

1) ரூபாய் 20.00 2) ரூபாய் 30.00 3) ரூபாய் 60.00


14. "நாளை மறுநாள் தனது பிறந்த நாளாகும்" என்று பைசர் நேற்றுக் காலையில் நண்பர்களுக்குக் கூறினான். இன்று புதன்கிழமை எனின், அவனது பிறந்தநாள் கொண்டாடப்படுவது,

1) வியாழக்கிழமை 2) வெள்ளிக்கிழமை 3) சனிக்கிழமை

15. 

இவ் வினாவில் உள்ள இரு குறியீடுகளும் 10 இற்கும் குறைந்த இலக்கங்களைக் காட்டுகின்றன. அதன்படி ◍ இக் குறியீட்டின் பெறுமதி.

1) 7 2) 6 3) 4

16. 

உருவில் ஒரே தராசினால் ஒரு பந்து, ஒரு பெட்டி என்பவற்றின் நிறையை அளக்கின்ற இரண்டு சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன. பெட்டியின் நிறை 14 kg எனின் பந்தின் நிறை யாது?

1) 8 kg 2) 10 kg 3) 6 kg


17. ஒரு புகையிரதம் குறிப்பிட்ட புகையிரத நிலையத்தில் நிற்காமல் சென்றது. இதற்கான காரணமாக இருக்கக்கூடியது.

1) அந்தப் புகையிரத நிலையத்தில் புகையிரதத்தை நிறுத்துவதற்கு புகையிரத ஓட்டுநர் மறந்து விட்டதனால்.
2) அந்தப் புகையிரத நிலையத்தில் ஏறுவதற்குப் பயணிகள் இல்லாமையால்.
3) அந்தப் புகையிரதம் கடுகதிப் புகையிரதம் என்பதனால்.

18. அமலா இரண்டு மாலை கட்டும் நேரத்தில் விமலா மூன்று மாலைகள் கட்டுவாள். இருவரும் 30 மாலைகளை கட்டினர் எனின், விமலா கட்டிய மாலைகள் எத்தனை?

1) 12 2) 16 3) 18

www.ikeau.lk

19. 

இவ் உருவை மடித்துச் செய்வதன் மூலம் உருவாகும் சதுரமுகி.

1) 
2) 
3) 

20. சிந்து வீதியில் செல்லும்போது அவனது நிழலானது இடது கைப்பக்கமாக விழுந்தது எனின், அவன் செல்லும் திசையாக அமையாதது.

1) வடக்கு 2) தெற்கு 3) கிழக்கு

21. பெட்டியொன்றில் 10 பந்துகள் உள்ளன. பிள்ளையொன்று 2 நிமிடங்களுக்கு ஒரு பந்து வீதம் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தது. அப் பிள்ளைக்குச் சகல பந்துகளையும் பெட்டியிலிருந்து வெளியே எடுப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

1) 16 நிமிடங்கள் 2) 18 நிமிடங்கள் 3) 20 நிமிடங்கள்

22. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் குறியீடுகளினால் எழுதப்பட்டுள்ளன. எனினும் குறியீடுகள் சொற்களின் ஒழுங்கிற்கேற்ப எழுதப்படவில்லை.

பூனை சோறு சாப்பிடும் - 

வெள்ளைப் பூனை ஓடும் - 

வெள்ளைச் சோறு சுவையானது - 

மேலே உள்ள தரவுகளின் படி 22, 23 ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

"பூனை" எனும் சொல்லிற்குப் பொருத்தமான குறியீட்டைத் தெரிவு செய்க.


1)  2)  3)

23. "சோறு" எனும் சொல்லிற்குப் பொருத்தமான குறியீட்டைத் தெரிவு செய்க.




1) 2)  3) 

24. படத்தில் உள்ளவாறு ஒரு தட்டில் பால்மாப் பைக்கற்றும் மறுதட்டில் 500g, 200g, 50g படிக்கற்களும் இடப்பட்டுள்ளன. இதன்படி பால்மா பைக்கற்றின் நிறை

1) 750g இலும் அதிகமாகும்.
2) 750g இலும் குறைவாகும்.
3) 750g இற்குச் சமனாகும்.



25. மரக்கறிகள், பாகற்காய் என்பவற்றைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.

1) 
2) 
3) 


26. மின்குமிழ் அலங்காரமொன்றில் இரண்டு சிவப்பு நிற மின்குமிழ்களுக்கு நடுவில் மூன்று மஞ்சள் நிற மின்குமிழ்கள் என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவ் மின்குமிழ் அலங்காரத்திலுள்ள சிவப்பு நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை 9 எனின், அவ் மின்குமிழ் அலங்காரத்திலுள்ள மஞ்சள் நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை யாது?


1) 27 2) 24 3) 30

www.lkedu.lk


27. பின்வரும் கருத்திற்குத் தகுந்த பழமொழியைத் தெரிவு செய்க.
உதவி செய்தவரை மறத்தலாகாது.
1) அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
2) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
3) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

28. குறித்த பாடசாலையொன்றின் பிரதான மண்டபத்தில் கதிரைகள் 9 நிரைகளாகவும் 8 நிரல்களாகவும் அடுக்கப்பட்டிருந்தன. அக்கதிரைகள் 6 நிரைகளாக இருக்கும் படி அடுக்கப்பட்டிருப்பின் கிடைக்கும் நிரல்களின் எண்ணிக்கை.
1) 10 2) 7 3) 12

29. 
இக் கூட்டினுள் வரையப்பட்டுள்ள உருக்களில் ஒரு உரு ஏதோ ஒரு விதத்தில் தவறாக வரையப்பட்டுள்ளது அவ்வுரு.
1) பூனை 2) முச்சக்கரவண்டி 3) வீடு

30. 
அருகில் தரப்பட்டுள்ள உருவின்படி பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1) உருவில் காணப்படும் செவ்வகங்களின் எண்ணிக்கையும் முக்கோணிகளின் எண்ணிக்கையும் சமனானது.
2) உருவில் காணப்படும் வட்டங்களின் எண்ணிக்கை முக்கோணங்களின் எண்ணிக்கையை விடக் கூடியது.
3) உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை செவ்வகங்களின் எண்ணிக்கையை விடக் கூடியது.

31. புத்தகம் ஒன்றில் 45ஆம் பக்கத்திலிருந்து 80ஆம் பக்கம் வரை வாசிக்கப்பட்டது. வாசிக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை யாது?
1) 36 2) 35 3) 34

32. 
சமஅளவான 7 குச்சிகளைக் கொண்டு செய்யப்பட்ட இரு சதுரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ்வாறாக 6 சதுரங்களை ஆக்குவதற்கு ஆகக்குறைந்தது எத்தனை குச்சிகள் தேவை?

1) 19 2) 15 3) 17

33. சரியான ஒழுங்கு முறையில் எழுதப்பட்ட விடையைத் தெரிவு செய்க.
1) கிராமம் → நகரம் → மாகாணம் → மாவட்டம்
2) மாகாணம் → மாவட்டம் → கிராமம் → நகரம்
3) கிராமம் → நகரம் → மாவட்டம் → மாகாணம்

34. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அவ் நகரங்களாக அமையக் கூடியவை.
1) யாழ்ப்பாணம், மட்டக்களப்பு
2) காலி, அம்பாந்தோட்டை
3) மன்னார், அநுராதபுரம்

35. நெட்டாண்டு ஒன்றின் தொடக்க நாள் புதன்கிழமை எனின், அவ் ஆண்டின் 184 ஆவது நாள் என்ன கிழமையாகும்?
1) புதன்கிழமை 2) வியாழக்கிழமை 3) வெள்ளிக்கிழமை

36. பேருந்து ஒன்றில் பயணம் செய்த பயணிகளில் குறித்த தரிப்பிடத்தில் 8 பேர் இறங்க 7 பேர் ஏறினர். அடுத்த தரிப்பிடத்தில் 12 பேர் இறங்க 9 பேர் ஏறினர். அப்போது பேருந்தில் 39 பேர் இருந்தனர் எனின், தொடக்கத்தில் இருந்த பயணிகள் எத்தனை பேர்?
1) 38 பேர் 2) 43 பேர் 3) 46 பேர்

www.lkedu.lk


37. ஒரு வரிசையில் சேகரிற்கு முன்னால் 8 பிள்ளைகளும் பின்னால் 14 பிள்ளைகளும் நிற்கின்றனர் எனின், நடுவில் நிற்கும் பிள்ளை எத்தனையாவது பிள்ளை?

1) 12 ஆவது 2) 10 ஆவது 3) 11ஆவது

38. இவ் வருடம் பாலனின் வயது 10 உம் அவன் சகோதரன் ரூபனின் வயது 13 உம் ஆகும். 5 வருடங்களுக்கு முன் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

1) 23 வருடங்கள் 2) 13 வருடங்கள் 3) 33 வருடங்கள்

39. 1 - 6 வரை இலக்கமிடப்பட்ட சதுரமுகி கட்டையின் 5 இன் எதிர்ப்பக்கம் யாது?



1) 1 2) 6 3) 4

40. வீதியைக் கடக்கும் முறை ஒழுங்கு மாறித் தரப்பட்டுள்ளது. இதனை ஒழுங்குபடுத்திக் காட்டும் விடை.

A - மீண்டும் வலது பக்கம் பார்க்கவும்.

B - வலது பக்கம் பார்க்கவும்.

C - வீதியைக் கடக்கவும்.

D - இடது பக்கம் பார்க்கவும்.

1) DBAC 2) BDAC 3) BCAD

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2025
மாதிரிப் பரீட்சை - 01

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை.

பத்திரம் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் .....

பாடசாலை .....

5

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்.	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.lkedu.lk

நாட்டின் எப்பாகத்திலிருந்தும்
கற்பித்தல் அனுபவம் உள்ள திறமையான ஆசிரியர்களிடம்
கல்வி கற்க விரும்புகிறீர்களா

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

FB Page - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

1. **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

ஒரு நாட்டின் பெருமை அந் நாட்டு மக்களின் கல்வியில் தங்கியுள்ளது. அத்தகைய பெருமைகளை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்களைப் போன்று பேணிக்காப்பது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் உள்ள நூல்களைக் கிழிக்காமலும் சிதைக்காமலும் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

❖ **கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.**

(i) ஒரு நாட்டின் பெருமை எதில் தங்கியுள்ளது?

.....

(ii) நூல்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?

.....

(iii) நூல் நிலையங்களில் உள்ள நூல்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

.....

(iv) "வித்தை" என்பதன் ஒத்த சொல் யாது?

.....

(v) உயர்திணை பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக.

.....

(vi) பந்தியில் இடம்பெற்றுள்ள இடப்பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

.....

(06 புள்ளிகள்)

2. **இணை மொழியைப் பூர்த்தி செய்க.**

குப்பை ..... **(01 புள்ளி)**

3. **சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) தன்நம்பிக்கை , தன்ணம்பிக்கை , தன்னம்பிக்கை

(ii) நோக்நர் , நோக்குநர் , நோக்குனர் **(02 புள்ளிகள்)**

4. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

(i) புலி தனது குட்டிகளுடன் விளையாடுகின்றன. ( )

(ii) காகிதம் சீனாவில் கண்டு பிடிக்கப்பட்டது. ( )

(iii) சிட்டுக்குருவியின் ஆயுட்காலம் பதினொரு ஆண்டுகள் ஆகும். ( )

(03 புள்ளிகள்)

5. **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**
அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே **(01 புள்ளி)**

6. **பழமொழியின் கருத்தை எழுதுக.**
சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.

.....

(01 புள்ளி)

www.lkedu.lk

7. **பின்வரும் குறியீட்டின் கருத்தினை எழுதுக.**

(i) 

(ii) 

....


(02 புள்ளிகள்)

8. **இலைக்குரிய மரபுப் பெயரை எழுதுக.**

பனை - .....

புல் - ..... **(02 புள்ளிகள்)**

9. **கீழே தரப்பட்ட குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துக.**



இடமிருந்து வலம்
1 இரவு எனும் சொல்லின் எதிர்க்கருத்து
3 பாத்திரம் எனும் சொல்லின் ஒத்த சொல் (பக்கம் மாறி வரும்)

மேலிருந்து கீழ்
1 திரையரங்குகளில் பார்ப்பது
2 உப்புநீர் காணப்படும் நீர் நிலை (தலைகீழாக உள்ளது)

(04 புள்ளிகள்)

10. **பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

(i) Hospital ..... (ii) Banana .....

(02 புள்ளிகள்)

11. **பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

(i) 

(ii) 

....

(02 புள்ளிகள்)

12. **பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.**

(i) Pencil / my / This / is .....

(ii) i / in / come / May .....

(02 புள்ளிகள்)

www.lkedu.lk

13. "மெத்தன இன்ன" எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

(01 புள்ளி)

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.


எல்லோரும் கை கழுவுங்கள்

..... (1 புள்ளி)

15. தரப்பட்ட எண்ணை இலக்கத்தில் எழுதுக.

ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பது .....

16. அம்புக்குறி அட்டை மூலம் குறிக்கப்பட்டுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.




.....

17. ஒரு கூடையில் 435 மாம்பழங்கள் உள்ளன. மற்றொரு பெட்டியில் முதல் பெட்டியை விட 50 பழங்கள் அதிகமாக உள்ளன. இரண்டு பெட்டியிலும் உள்ள மொத்த மாம்பழங்கள் எத்தனை?

..... மாம்பழங்கள்

18. தரப்பட்டுள்ள பென்சிலின் நீளத்தை அளந்து எழுதுக.



..... Cm

19. 3m 45cm இல் எத்தனை சென்ரிமீற்றர் உண்டு?

..... cm

20. அட்டையில் தரப்பட்டுள்ள எண்களை 3ஆல் பெருக்குவதன் மூலம் அமையும் எண் கோலத்தை உருவாக்குக.

i) | 4 | | |

ii) | 2 | | |


21. ஒரு வரிசையில் 5 கதிரைகள் வீதம் 10 நிரைகளும் இன்னொரு வரிசையில் 6 கதிரைகள் வீதம் 7 நிரைகளும் உள்ளன. அங்கு அடுக்கப்பட்டுள்ள மொத்த கதிரைகளின் எண்ணிக்கை யாது?

..... கதிரைகள்

22. தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்படாத பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.



.....

23. 

திட்டத்தைக் குறிக்கும் எழுத்து யாது?

.....

www.ikedu.lk

24. 1kg அரிசியின் விலை ரூபாய் 480.00 எனின், 1kg 750g அரிசியின் விலை யாது?

ரூபாய் .....


25. 

கடிகாரம் காட்டும் நேரத்திற்கு 15 நிமிடங்கள் முந்திய நேரத்தை சொற்களில் எழுதுக.

.....

26. வேளை ஒன்றிற்கு ஒரு தேக்கரண்டி வீதம் பாணி மருந்தை உட்கொள்ளும் நோயாளி ஒரு நாளைக்கு மூன்று வேளை உட்கொள்கின்றார் எனின், ஒரு வாரத்திற்கு அவருக்குத் தேவையான பாணி மருந்தின் கனவளவு யாது?

..... mℓ

27. 


கட்டத்தில் உள்ள மீன்களின் எண்ணிக்கையை உரோம எண் குறியில் எழுதுக.

.....

28. ஒவ்வொன்றும் ரூபாய் 80.00 விலையுடைய அப்பியாசக் கொப்பிகள் 4 உம், ஒவ்வொன்றும் ரூபாய் 35.00 விலையுடைய அப்பியாசக் கொப்பிகள் 8 உம் வாங்கிய மதன் செலுத்த வேண்டிய பணம் யாது?

ரூபாய் .....

29.



உணவு	வி.பி. எண்ணி
தோசை	10
இட்லி	.....
பிட்டு	08
இடியப்பம்	04

i) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப வரைபில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.
ii) வரைபில் உள்ள தகவல்களின் அடிப்படையில் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

(32 புள்ளிகள்)

❖ **இல 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடையிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. "நான் நாட்டிற்கும் உலகிற்கும் பயனுள்ள ஒருவனாவேன்" என்பது, தியானத்தின் எப் படிமுறையாகும்?
1) பிரார்த்தனை 2) திடசித்தம் 3) உதிப்பு

31. 

படத்தில் காட்டப்படுவது சூரிய நமஸ்காரத்தின் எத்தனையாம் படிமுறையாகும்?
1) 4ஆம் படிமுறை
2) 6ஆம் படிமுறை
3) 8ஆம் படிமுறை

www.lkedu.lk

32. "மகாவலி பாய்வதும் இந்நாடே..." என்ற பாடலடி மூலம் குறித்துக்காட்டுவது.
1) தேசப் பற்றுப்பாடல் 2) கங்கை நதிப்பாடல் 3) சுரங்கப்பாடல்

33. சீலம் காப்போருக்கு அன்னதானம் வழங்கும் முறை எம் மதத்தவருடன் தொடர்புடையது.
1) முஸ்லிம் 2) கிறிஸ்தவம் 3) பௌத்தம்



34. திருக்கொன்றைத் தாவரம் பூக்கும் காலம் எது?
1) புரட்டாதி 2) ஆடி 3) ஆவணி

35. மருந்திற்குப் பயன்படுத்தப்படும் மரப்பட்டை எத்தாவரத்தில் இருந்து பெறப்படுகிறது?
1) பொன்னாவரை 2) ஆடாதோடை 3) வெட்டிவேர்


36. நோய்களைப் பரப்பும் பிராணிகளைக் கொண்ட கூட்டம் எது?
1) நுளம்பு, பூனை, எலி
2) இலையான், எறும்பு, நரைப்புளுனி
3) இலையான், கபரக்கொய்யன், எறும்பு

37. ஆக்கபூர்வமான கூடு கட்டும் திறன் கொண்ட பறவை எது?
1) சிட்டுக்குருவி 2) தச்சன்குருவி 3) தேன்குருவி

38. கைக்குட்டையில் பூ, காம்பு, இலை போன்றவற்றைத் தைப்பதற்குப் பொருத்தமான அலங்காரத் தையல் எது?

1) 
2) 
3) 

39. மேசன் பயன்படுத்தும் உபகரணம் எது?
1) துறப்பணம் 2) தூக்குக்குண்டு 3) அரம்

40. 

பூவின் படத்தில் A, B, C ஆகிய எழுத்துக்களுக்குரிய பகுதிகள் முறையே எவை?
1) குறி, தம்பம், சூலகம்
2) கேசரம், குறி, சூலகம்
3) குறி, அல்லி, புல்லி

41. ஈற்றுணவாக உண்ணக்கூடிய உணவுத்தொகுதி எது?
1) கீரை வகை
2) கொழும்புச் சத்துள்ள உணவுத் தொகுதி
3) பழவகை உணவுகள்

42. பானம் தயாரிக்கப் பயன்படும் காய்தொகுதி எது?
1) பலா, மா, நெல்லி
2) விரலிக்காய், பலா. நெல்லி
3) அன்னாசி, நெல்லி, விரலிக்காய்

43. 
இவ் உருவின் பெயர் யாது?
1) கப்பி
2) ஊசி தாங்கி
3) அழிப்பான்


44. மழைக்காலங்களில் நீர் வழிந்தோடும் வடிகால்கள் அடைத்து வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான பிரதான பொருள்.
1) களி 2) மணல் 3) குப்பைகூளம்

www.ikedu.lk

45. பின்வருவனவற்றுள் தொற்றாத நோய் எது?
1) சின்னம்மை 2) நீரிழிவு 3) டெங்குக் காய்ச்சல்

46. நீரில் மிதக்கும் பொருள் பின்வருவனவற்றுள் எது?
1) பந்து 2) குண்டூசி 3) நாயணக்குற்றி

47. நீரை விரைவாக வடிய விடக்கூடிய மண் எது?
1) களிமண் 2) மணல் மண் 3) இருவாட்டி மண்

48. 

வடித்தல் மூலம் நீரைச் சுத்தம் செய்ய முடியுமாவெனக் கண்டு பிடிப்பதற்குத் தயார் செய்யப்பட்ட எளிய அடுக்கு ஒன்றின் படம் தரப்பட்டுள்ளது. இதில் உள்ள மூன்று கோப்பைகளினதும் அடியில் வைக்கப்பட்டுள்ள பொருளாக இருக்கக்கூடியது எது?
1) உப்புக்கட்டி அல்லது செங்கல் துண்டு
2) கருங்கல் துண்டு அல்லது தாவர இலைகள்
3) பஞ்சு அல்லது வெள்ளைத் துணித்துண்டு

49. மாணவன் ஒருவன் தனது பிறந்த நாளன்று செய்யக்கூடிய ஆக்க பூர்வமான செயற்பாடு அல்லாதது.
1) முதியோர் இல்லத்திற்கு உணவு வழங்குதல்
2) பட்டாசு கொளுத்துதல்
3) மரக்கன்று நடுதல்

50. குழுவாக வேலை செய்பவரிடம் இருக்க வேண்டிய பண்பு எது?
1) தன் பணியைப் பொறுப்புடன் நிறைவேற்றுதல்
2) தன்னிச்சையாகச் செயற்படுதல்
3) மெதுவாக வேலை செய்தல்

51. தொடர்பாடல் கூறுகள் எவை?
1) அனுப்புபவர், இணையம், பெறுநர்
2) அனுப்புபவர், ஊடகம், பெறுநர்
3) அனுப்புபவர், கடிதம், பெறுநர்


52. மலை நாட்டுப் பிரதேசத்தில் அடிக்கடி நிகழும் இயற்கை அனர்த்தம் எது?
1) மண்சரிவு 2) சுனாமி 3) சூறாவளி

53. பச்சை நிறத்தைப் பெறுவதற்கு கலக்க வேண்டிய நிறங்கள் எவை?
1) நீலம், சிவப்பு 2) மஞ்சள், நீலம் 3) சிவப்பு, மஞ்சள்

54. இரசாயனப் பசளையைப் பயன்படுத்துவதன் தீமையாக அமைவது?
1) குறுகிய காலத்தில் பயனைப் பெறலாம்
2) மண் வளம் குன்றுதல்
3) விளைச்சல் அதிகரிக்கும்


55. சேதனைப் பசளையாக அமைவது,
1) இலைச்சருகு 2) யூரியா 3) அமோனியா

56. தேசிய இலட்சினையில் நெற்கதிர் குறிப்பது.
1) தார்மீகம் 2) உலக நிலைப்பாடு 3) தன்னிறைவும் செழிப்பும்

57. 


இந்த உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அறிந்து கொள்வது,
1) காற்று வீசும் திசையை
2) காற்றின் கதியை
3) காற்றின் அளவை

www.lkedu.lk

58. 

தரப்பட்ட படத்தில் விம்பத்தை அவதானிக்கும் முறை தொடர்பான சரியான கூற்று,

1) துளையூடாக அவதானித்தல், தலைகீழான விம்பம், சிறிய விம்பம்.
2) திறந்த அந்தத்தின் ஊடாக அவதானித்தல், தலை கீழான விம்பம், உருச்சிறுத்த விம்பம்.
3) கறுப்பு நிறத்தாளில் விம்பம் தோன்றுதல், தலை கீழான விம்பம், சிறிய விம்பம்.

59. 

வீதி நிறச் சமிக்ஞைக் கம்பத்தில் மேலிருந்து கீழாக A, B, C எனும் நிறச் சமிக்ஞை அமைந்துள்ள சரியான ஒழுங்கு முறை,

1) சிவப்பு, மஞ்சள், பச்சை
2) சிவப்பு, பச்சை, மஞ்சள்
3) மஞ்சள், பச்சை, சிவப்பு

(30 புள்ளிகள்)

60. **"அதிகரித்து வரும் நீர்ப்பற்றாக்குறையை நீக்குவதற்கு நாம் செய்ய வேண்டியவை"** எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் பொருத்தமான எழுவாய், பயனிலைத் தொடர்பு கொண்டதாகவும் சரியான எழுத்துக் கூட்டலுடனும் இருத்தல் வேண்டும்.

(1) .....

.....

(2) .....

.....

(3) .....

.....

(06 புள்ளிகள்)

www.lkedu.lk